بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/09/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில் நடைபெற்ற சில போர்கள் மற்றும் படையெடுப்புகள் ஆகியவற்றின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹுனைன் போரைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதன் மேற்கொண்ட விபரம் இவ்வாறாகும்; ஹுனைன் போரிலும் அல்லாஹுத்தஆலாவிடமிருந்து எப்படிப்பட்டதொரு படை இறக்கப்பட்டதாக குறிப்பு கிடைக்கின்றது என்றால், அவர்கள் வானவர்கள் என்று விளக்கமளிக்கப்படுகிறது. விரிவுரையாளர்கள் மற்றும் வரலாற்று ஆசிரியர்கள் இந்த போரில் வானவர்கள் இறங்கியது தொடர்பாக பலவிதமான கருத்துக்களை கூறியுள்ளார்கள். சஹீஹான அறிவிப்புகளிலிருந்து போரில் வானவர்கள் உண்மையிலேயே இறங்கியதாக நிரூபணமாகின்றது. எவ்வாறாகிலும், இங்கு உதவிக்கு ஒரு வானவரே போதுமானவராக இருக்கும்போது ஆயிரக்கணக்கான வானவர்கள் ஏன் இறங்கினார்கள் என்ற ஐயம் உருவாகிறது. இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் எழுதுகிறார்கள்: அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வானவர்கள் இறங்குவது என்பது முஸ்லிம்களுக்கு ஒரு நற்செய்தியை தெரிவிப்பதாக இருந்தது. இல்லையென்றால், அல்லாஹ் தஆலா அது இல்லாமலும் தனது எதிரிகளுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவியிருக்க முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த விஷயத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: நம்பிக்கையாளர்களின் உள்ளம் குளிர மற்றும் போரில் அவர்கள் அச்சமடையாமல் இருக்க வானவர்களின் உதவி பற்றிய நற்செய்தி திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களிடம் அவர்களுக்கு அவன் ஐயாயிரம் வானவர்களால் உதவ வருவான் என்று வாக்குறுதி அளித்துள்ளான். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தியாக இருப்பதற்காகவே இந்த எண்ணிக்கை அதிகமாக ஆக்கி கூறப்பட்டுள்ளது.

எதிரிகள் தோல்வி அடைந்தது மற்றும் தப்பி ஓடிச் சென்றதை பற்றி முன்னர் விரிவாக கூறப்பட்டு விட்டது. உண்மையில் அரேபியாவின் வலிமையான கோத்திரங்களில் ஒன்றான ஹவாஸின் கோத்திரம், இன்று வரை முஹம்மத் (ஸல்) எந்த ஒரு போர்க்கலை தெரிந்த சமுதாயத்துடனும் மோதியதில்லை; எங்களுடன் மோதினால் போர் என்னவாக இருக்கும் என்று நாங்கள் தெரிவிப்போம் என்று வாதம் செய்தார்கள். அவர்கள் சிறிது நேரத்திலேயே தோல்வியுற்று ஓடி விட்டார்கள். மேலும், தங்களுடைய மனைவி, குழந்தைகள், கால்நடைகள் மற்றும் செல்வங்களைப் பற்றி எவருக்கும்

அக்கறையிருக்கவில்லை. ஹவாஸின் பின்வாங்கி ஓடிச் சென்றிருந்தபோதிலும் ஸகீஃப் கோத்திரத்தின் போர் வீரர்கள் நிலைத்து நின்றனர். அவர்கள் மிகவும் வீரத்துடன் போரிட்டார்கள். எதுவரை என்றால், அவர்களில் எழுபது நபர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களின் கொடியை பிடித்திருந்த கடைசி நபரான உஸ்மான் பின் அப்தில்லாஹ் கொல்லப்பட்டதும் பிறகு ஸகீஃபும் ஓடிவிட்டார்கள்.

இந்த போரில் நான்கு நபித்தோழர்கள் ஷஹீதானார்கள். அவர்களுடைய பெயர்கள்; ஹஸ்ரத் உம்மு ஐமன் (ரலி) அவர்களின் மகன் ஐமன் பின் உபைத் (ரலி), ஸுராக்கா பின் ஹாரிஸ் (ரலி), யஸீத் பின் ஸும்ஆ (ரலி), மற்றும் நான்காமவர் ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) ஆவார்கள். ஓர் அறிவிப்பாளர் கூறுகிறார்: நிராகரிப்பாளர்களுக்கு தோல்வி ஏற்பட்ட போது முஸ்லிம்கள் தத்துமது கூடாரங்களை நோக்கி சென்று விட்டார்கள். நான் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களிடையே சென்று கொண்டிருப்பதை கண்டேன். என்னை காலித் பின் வலீதிடம் கொண்டு சேர்ப்பவர் யார் என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள். அன்னார் அவர்களை அடைந்தபோது காலித் பின் வலீத் சேணத்தில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் காலிதுக்கு அருகில் அமர்ந்தார்கள். காயத்தை கண்டு தன்னுடைய உமிழ் நீரை அதில் வைத்தார்கள். இதனால் அவரது காயம் ஆறிவிட்டது. அவர்கள் மட்டுமின்றி ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோரும் காயமடைந்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் ஹுனைன் போர்க்களத்திலிருந்து சில முஸ்லிம்கள் ஓடிவிட்டார்கள். அவர்களில் சிலர் மக்கா சென்று விட்டார்கள். அங்கு, முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்பட்டு விட்டது; முஹம்மத் (ஸல்) அவர்கள் நஊதுபில்லாஹ் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று கூறிவிட்டார்கள். இந்த செய்தியால் மக்காவில் இருந்த நயவஞ்சகர்கள் மற்றும் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அரேபியர்கள் இன்று தனது மூதாதையர்களின் மதத்திற்கு திரும்பி விடுவார்கள் என்று கூறலாயினர். சிறிது நேரமே கழிந்திருந்தது, ஹுனைனிலிருந்து முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள் என்றும் பனூ ஹவாஸின் படுதோல்வியடைந்து ஓடிவிட்டார்கள் என்ற நற்செய்தியும் வந்து சேர்ந்தது.

**மக்கா வெற்றி பற்றிய குறிப்பிற்கு முந்தைய குத்பாவில் இஸ்ம் போர் பற்றிய குறிப்பு எடுத்துரைக்கப்பட்டது.** அதில், கடந்து செல்லும்போது அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறிய ஒரு மனிதரை முஹல்லிம் பின் ஜஸாமா என்ற ஸஹாபி கொன்று விட்டார். அந்த சம்பவத்தின் மேற்கொண்டு விவரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றது. அது யாதெனில், ஹுனைன் போருக்குப் பிறகு ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாயிஃபை நோக்கி புறப்பட்டார்கள். ஒரு நாள் லுஹர் தொழுகைக்குப் பிறகு உயைனா பின் ஹிஸ்ன் எழுந்து கொலையுண்ட ஆமிர் பின் அஸ்பத் அஷ்ஜயீ -யின் கொலைக்கு பழி தீர்க்க வேண்டினார். முஹல்லிம் பின் ஜஸாமாவை அக்ரஃ பின் ஹாபிஸ் காப்பாற்ற நாடினார். இவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வாதம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு உயைனாவை இழப்பீட்டை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார்கள். இழப்பீடு போன்றவற்றின் தீர்மானத்திற்கு பிறகு முஹல்லிம் எழுந்து ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கருகில் சென்று அமர்ந்தார். அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவர், தங்களை வந்தடைந்த விஷயத்தில் நான் அல்லாஹ்விடம் தவ்பா செய்கிறேன். தாங்களும் எனது மன்னிப்பிற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார். உமது பெயர் என்ன என்று ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், முஹல்லிம் பின்

ஜஸாமா என்று கூறினார். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நீர் இஸ்லாத்தின் ஆரம்ப நிலையிலேயே அவரை கொன்று விட்டீரா என்று கேட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உரத்த குரலில், அல்லாஹ்வே! முஹல்லிமை மன்னிக்காதே என்று கூறினார்கள். இந்த வாக்கியத்தை அனைவரும் கேட்டார்கள். அவர் மீண்டும், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் மன்னிப்பு வேண்டுகிறேன்; தாங்களும் எனக்காக மன்னிப்பை வேண்டுங்கள் என்று கூறினார். அன்னார், மக்கள் கேட்க வேண்டும் என்பதற்காக மீண்டும் உரத்த குரலில், அல்லாஹ்வே! முஹல்லிம் பின் ஜஸாமாவை மன்னிக்காதே என்று கூறினார்கள். அவர் மூன்றாவது முறை மீண்டும் கேட்டுக் கொண்டார். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூன்றாவது முறையும் அவ்வாறே கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், என் முன்னே இருந்து எழுந்து சென்று விடுங்கள் என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மன்னிப்பிற்காக துஆவும் செய்தார்கள் என்று அவரது சமுதாய மக்கள் கூறினார்கள் என்ற இப்னு இஸ்ஹாக்கின் ஓர் அறிவிப்பும் உள்ளது.

**அவ்தாஸ் போரின் விவரம் இவ்வாறாகும்.** பனூ ஹவாஸின் தனது மனைவி, குழந்தைகள், கால்நடைகள் மற்றும் செல்வங்களுடன் போர் புரிந்தனர். அவர்களோ ஓடி விட்டார்கள். தற்போது இவை அனைத்தும் போர் செல்வங்களாக முஸ்லிம்களுடைய கைகளில் வந்து விட்டன. ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரிகளை பின்தொடர்ந்து செல்ல ஹஸ்ரத் அபூ ஆமிர் அஷ்அரி (ரலி) அவர்களது தலைமையில் ஒரு படையை அவ்தாசை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அந்தப் படையில் அபூ மூஸா அஷ்அரி (ரலி) மற்றும் சலமா பின் அக்வா (ரலி) ஆகியோர் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) அவர்கள் எதிரிகளிடம் ஒற்றைக்கு ஒற்றை சண்டையிட அழைப்பு விடுத்தார்கள். அங்கு ஈடிணையற்ற போர் திறமைகளை பெற்றிருந்த காரணத்தால் பிரசித்தி பெற்றிருந்த பத்து சகோதரர்கள் இருந்தார்கள். இந்த பத்து சகோதரர்களும் ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்காக வெளியே வந்தார்கள். அபூ ஆமிர் (ரலி) அவர்கள் ஒவ்வொருவரையும் முதலில் இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். ஆனால் அவர்களோ சண்டையிடுவதற்கு முக்கியத்துவம் வழங்கினர். ஆகவே, அவர்கள் கொல்லப்பட்டார்கள். ஒருவர் பின் ஒருவராக ஒன்பது சகோதரர்கள் கொல்லப்பட்டார்கள். பத்தாவது சகோதரர் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மேலும், அவர் மிக நல்ல முஸ்லிமாக இருந்தார் என்று கூறப்படுகிறது. இவ்வாறாக ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) அவர்கள் மிக வீரத்துடன் சண்டையிட்டார்கள். இதற்கிடையில் ஓர் அம்பு அவர்களுடைய நெஞ்சில் தைத்தது. மற்றொன்று அவர்களுடைய முழங்காலில் தைத்தது. காயம் ஆழமாக இருந்த காரணத்தினால் அவர்களால் பிழைக்க முடியவில்லை. அபூ மூஸா அஷ்அரி (ரலி) அம்மக்களுடன் சண்டையிட்டார்கள். எதிரிகள் தோல்வியடைந்து அங்கிருந்து ஓடி விட்டார்கள்.

**பிறகு துஃபைல் பின் அம்ர் தவ்ஸி (ரலி) அவர்களின் படையெடுப்பு பற்றிய குறிப்பு உள்ளது.** இது ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) ஹுனைனிலிருந்து தாயிஃபை நோக்கி புறப்படுகையில் அன்னார் துஃபைல் தவ்ஸி (ரலி) அவர்களை துல் கஃப்பைன் என்ற பெயர் கொண்ட சிலையை உடைக்க அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம் ஸலாத்தை நன்கு பரப்புங்கள். அதாவது, அமைதியினை பரப்புங்கள்; மக்களுக்கு உணவளியுங்கள்; ஒரு நற்பண்புள்ள மனிதர் தன் வீட்டார்களிடம் வெட்கப்படுவதைப் போன்று அல்லாஹுத்தஆலாவிடம் வெட்கப்படுங்கள்; தவறு அல்லது பாவம் எப்பொழுது

நேர்ந்தாலும் உடனடியாக அதற்குப் பிறகு நன்மையை செய்யுங்கள்; ஏனென்றால் நன்மைகள் பாவங்களை அழித்து விடுகின்றன; தமது சமுதாய மக்களை உடனழைத்துக் கொள்ளுங்கள்; இந்த பணியை முழுமைப்படுத்தியதும் தாயிஃபுக்கு திரும்பி வாருங்கள் என்று கூறினார்கள். எனவே, அவர் தன்னுடைய சமுதாயத்தின் 400 நபர்களை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். மேலும், மரத்தால் செய்யப்பட்டிருந்த அந்த சிலையை நெருப்பால் எரித்துவிட்டார்கள்.

**தாயிஃப் போரும் ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதமே நிகழ்ந்தது.** தாயிஃப் மிகவும் வலிமையான இடமாக இருந்தது. ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் ஓராயிரம் வீரர்களைக் கொண்ட பந்திப்படையை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அங்கு சென்று தாயிஃப் வாசிகளிடம் பேச்சுவார்த்தைக்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் தாயிஃபை வந்தடைந்தார்கள். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் தாயிஃபுக்கு மிக அருகில் ஒரு திறந்தவெளியில் கூடாரமிட்டார்கள். அச்சமயம் படையானது முழுவதுமாக முகாமிட்டிருக்கவுமில்லை. கோட்டையில் இருந்து வில்லாளிகள் கடுமையாக அம்புகளை எய்து பல முஸ்லிம்களை காயப்படுத்தி விட்டார்கள். முற்றுகையின் போது இரு தரப்பிலிருந்தும் அம்புகள் மற்றும் கற்கள் எறியப்பட்டன. இந்த சூழ்நிலையை முடிவுக்கு கொண்டு வர ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கல்லெறியும் கருவியை பயன்படுத்தி தாயிஃப் வாசிகள் மீது பெரும் பெரும் கற்களை வீசினார்கள். அதற்கிடையில் அன்னார் ஒருமுறை தாயிஃப் வாசிகளின் திராட்சை தோட்டங்களை வெட்டவும் கட்டளையிட்டார்கள். என்னைப் பொறுத்தவரை பொதுவாக அச்சுறுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற இறுதி ஆயுதமாக இது இருந்தது. ஏனென்றால், பிறகு அதனை ரத்து செய்தும் விட்டார்கள். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) மற்றும் சஹாபிகள் அரை மாதம் அல்லது அதைவிட அதிக காலம் வரை தாயிஃப் வாசிகளுடன் போரில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் ஹுனைன் போரின் தோல்வியால் தாயிஃப் வாசிகள் எந்த அளவுக்கு அச்சத்திலும் பீதியிலும் இருந்தார்கள் என்றால் அவர்கள் கோட்டைக்குள் இருந்தபடியே சண்டையிட்டார்கள்; வெளியே வரவில்லை.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மதிப்பிற்குரிய டாக்டர் ஸய்யிது ஷஹாப் அஹ்மத் ஸாஹிப் (இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலை...., அவர்களின் ஸஹாபியான பீஹார் மாநிலத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் ஸய்யிது இராதத் ஹுஸைன் ஸாஹிப் ரலி...., அவர்களது மகள் வழி பேரன் ஆவார்). பிறகு, லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முபாரக் கோக்கர் ஸாஹிப் ஆகியோரின் புகழத்தக்க நற்பண்புகளை எடுத்துரைத்தார்கள். மேலும், ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். இருவரது மஃபிரத்துக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ

رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)